பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 06 வியாழக்கிழமை (20 - 01 - 2000) VALAMPURI ஒலி: 32

★ இனப்பிரச்சினையின் தீர்வு விடயத்தில்

# சமாதான சூழ் நிலையை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைக்கு உதவவும்!

## பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீட்டிடம் மன்னார் ஆயர் வேண்டுகோள்

(மன்னார்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுவிடயத்தில் சமாதானப் பேச்சுக்கான நல்ல சூழ் நிலையை உருவாக்குவதில் பிரிட்டன் ...மக்கு உதவி செய்யவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகித்து பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும்.

இவ்லாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா பீட்டைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

மன்னாருக்கு விஜயம் செய்த பிரிட்டிஸ் தூதுவர் திருமதி லிண்டா டபீட்டைச்சந்தித்த இராயப்பு யோசப் ஆண்டகை மேலும் அவரிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாவது;

இலங்கையின் உள்நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளன அமைதியின்மையைப் போக்கவும், நிலையான அமைதியை ஏற்படுத்தவும் மூன்றாந்தர மத்தியஸ்தராக பிரிட்டன் இருந்து செயற்பட வேண்டுமெனவும்:

அதன்மூலம் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு

(6ம் பக்கம் பார்க்க)

### செம்மணி புதைகுழி விவகாரம்

## விசாரணையை குறிப்பிட்ட தினத்தில் நடத்துவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

யாழ்.செம்மணிப்புதைகுழிகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளை குறிப்பிட்ட தினத்தில் நடத்த முடியுமா என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து இதுதொடர்பாக யாழ். மேலதிக நீதிவானுடன் தொடர்புகொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் என யாழ். நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்துள்ள போதிலும் யாழ். நகரம் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதால் வழக்குடன் தொடர்புடைய சட்ட வைத்திய நிபுணர்கள் யாழ். செல்ல மறுப்புத்தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கேட்டபொழுது சட்டவைத்திய நிபுணர்கள் யாழ்.செல்ல மறுப்பு தெரிவித்துள்ளதால் திட்டமிட்டபடி 25ஆம் திகதி விசாரணைகளை நடத்த முடியாது உள்ளது. ஆகையால் விசாரணையை வேறொரு தினத்தில் நடத்தலாமா என்பதற்கு யாழ். மேலதிக நீதிவானும் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் அதற்காக அவருடன் கலந்து ஆலோசிக்கவுள்ளேம் என

( 6ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலான துப்பாக்கி வேட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் பலி

(வவுனியா)

ஈ.பி,ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த திரு.குமார் வயது 20 என்னும் இளைஞர் நேற்றிரவு 8.30 மணிக்கு சூசைப்பிள்ளையார் குளம் என்னும் இடத்தில் வைத்து சுடப்பட்டு காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்,

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஈ.பி. ஆர்.எல்.எவ்.கருத்து வெளியிடுகையில் தற்செயலாக துப்பாக்கி வெடித்ததினால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து தமிழ் பெண் திடீர் தலைமறைவு

(கொழும்பு)

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் பெண்ணொருவர் திடீரென காணாமல் போயுள்ளார்,

இவருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. எனவே முகத்துவாரம் காக்கைதீவு வாசியான திருமதி ஆனந்தன் முத்தம்மா என்பவர் பற்றி யாராவது தகவல் அறிந்தால் பொலிஸில் தெரிவிக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-14)

## கிபிர் விமானம் குண்டு வீச்சு

நேற்று நண்பகல் 12 மணியளவில் அறுகுவெளிப் பகுதியில் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன இது தொடர்பான சேத விவரம் தெரியவரவில்லை.

இதேவேளை கைதடி நாவற்குழி, தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி மத்தி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளவும் குடியேறி வருகின்றனர் இவர்களுக்கு தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் உணவுப் பொருட்களை வழங்கிவருகின்றது.

### யாழ். மாவட்ட தளபதி

## மேஜர் ஜெனரல் ஜெயக்கொடி மாரடைப்பினால் காலமானார்

(பலாலி)

யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் றிகாஸ் ஜெயக்கொடி பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் மாரடைப்பினால் காலமானார்.

இவர் அண்மைக்காலமாக இருதயநோய் காரணமாக சுகவீனமுற்ற நிலையில் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெயக்கொடி யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த சுசில் தென்னக்கோன் இடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் 1970-ம் ஆண்டு இராணுவத்தில் கடேற்பிரி

[6ஆம் பக்கம் பார்க்க]

### குமார் கொலைச் சம்பவம்

## 100க்குமேற்பட்டோரிடம் வாக்குமூலம் கொலையாளி விரைவில் பிடிபடுவார்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித்தலைவர் குமார்பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக இதுவரை 100க்கு மேற்பட்டோரின் வாக்குமூலம் பெறப்பட்டிருப்பதாக குற்றத்தடுப்பு புலனாய்வுத்துறை பணிப்பாளர் பத்துலவிக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

குமாரின் கொலைதொடர்பாக நேரில் கண்டவர்கள் சாட்சியம் அளிக்க (பயத்தினால்) பின்நிற்பதனால் கொலைபற்றிய மர்மம் துலங்குவதில் தாமதம் ஏற்பட்டாலும்விரைவில் துப்புதுலங்கும் என பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## அரசியல் அமைப்பு திருத்தம் ஜனாதிபதி தலைமையில் குழு ஆராய்வு

[கொழும்பு]

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இன்று அலரிமாளிகையில் கூடவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான இக்குழுக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், தர்மசிறிசேன நாயக்கா, ஜி. எல். பீரிஸ், எஸ். பி. திஸநாயக்கா ஆகியோரும் இலங்கை கம்யூனிஸ் கட்சியைச் சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் ஊடுருவலைத்தடுக்க கொழும்பில் விசேட ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்ற தகவலையடுத்து கொழும்பு புலனாய்வுப் பிரிவில் உடனடி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: உயர் அதிகாரிகளைக் கொண்ட மாநாடு ஒன்று அண்மையில் கொழும்பில் நடாத்தப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் சில திடீர் இடமாற்றங்கள் மேற்கொள்ளவேண்டி உள்ளதாக

(6ம் பக்கம் பார்க்க)

### கட்டைப்பிராயில் பட்டப்பகலில்

## அம்மனின் தாலியைத் திருடியவர்கள் பொதுமக்களிடம் மாட்டுப்பட்டனர்

கல்வியங்காடு கட்டைப்பிராய் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்துள் நுழைந்து அம்மனின் தாலியை திருடிய திருடர்கள் பொதுமக்களிடம் வசமாக மாட்டுப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்றுக்

(6ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

2000 ஆண்டில் 12 ராசிகள் பலன்

எல்லா ராசிகளுக்குமான விரிவான பலன்கள் எழுதப்பட்ட நூல் எங்கும விற்பனையாகிறது. வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கும் பலன்கள் எழுதப்பட்டுள்ளன. நூல் ஆசிரியர் சோதிட ஞானிசண் மாஸ்ரர் விலை ரூபா 15/- சிறிசாயி அச்சகம் பூநாறி மரத்தடி, கொக்குவில்.

## தமது சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர்

(தென்மராட்சி)

நாவற்குழிப் பகுதியில் இருந்து அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்ற மக்களில் சுமார் முந்நூறு பேர் இதுவரை தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் வருகை தொடர்ந்து மந்திகையிலேயே இருந்து வருவதாகவும் - அதன காரணமாக வித்தியாலயம் பூரணமாக இன்னமும் இயங்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

(க-7)

# கஞத்துறைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள யாழ். கைதிகள் இங்கு கொண்டுவரப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு அவசர செய்தி

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் குறிப்பாக குடாநாட்டு மீனவர்களை மீண்டும் மீன் பிடிக்க அனுமதித்தல், களுத்துறைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண கைதிகளை யாழ் சிறைச்சாலைக்கு இடம் மாற்றுதல் போன்ற குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த யாழ். மாவட்ட அமைப்பாளர் என், கே. விந்தன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு அனுப்பிய அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அண்மையில் களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்து சிறைக்காவலர்களால் படுகொலை செய்யப்பட்ட இரு தமிழ் அரசியற் கைதிகளின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகை வழங்குவதுடன் இவ் இரு படுகொலைகளையும் புரிந்த சிறைக்காவலர்களை சட்டத்தின் முன்நிறுத்தி கடுமையான முறையில் தண்டனை வழங்குதல்.

குடாநாட்டில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாயம் பயிரிடும் காணி நிலங்களை உரியவர்களிடம் மீளளித்தல்.

யாழ். குடாநாட்டின் கரையோரப்பகுதிகளான கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், கரையூர், நாவாந்துறை அடங்கலாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் வாழ் மீனவர்கள் கடந்த சில மாதங்களாக கடற்றொழிலில் ஈடுபட முடியாமல் கடற்படையினராலும் இராணுவத்தினராலும் மீன் பிடிககும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் ஏற்கவே இம் மீனவர்கள் ஒரு சில மாதங்களுக்கு முன் கடலில் போட்ட வலைகளை கூட திரும்ப கடலிற்கு சென்று கரைக்கு எடுத்து வரமுடியாதநிலையிலும் திண்டாடுகிறார்கள். இதனால் மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான இவ் உபகரணங்கள் உக்கிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் படை அதிகாரிகளிடம் தங்கள் கஷ்ட நிலையை விளக்கும் மீனவர்களின் அனுமதிப் பத்திரங்கள் கூட படையினரால் மீளப் பெறும் நடவடிக்கைகளும் நடந்துள்ளன.

வாழ்வின் அன்றாட சீவியத்திற்காக கடற்றொழிலையே நம்பியிருக்கும் இந்த மீனவர்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளை ஏற்று தாங்கள் உரியநடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதுடன்—

யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குகொண்டு செல்லப்படும் தமிழ் இளைஞர், யுவதிகளின் பெற்றோர், உருத்துடையோர் தங்கள் பிள்ளைகளை பார்வையிடுவதற்கும் வெளியில் எடுப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அவையாவன, கொழும்பு செல்ல பாதுகாப்பு அனுமதி நேரகாலத்திற்கு கிடைக்காமை, மொழிப் பிரச்சினை, பணப்பிரச்சினை, கொழும்பு சென்றால் கொழும்பு சென்ற பெற்றோர்களிடையே சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யும் நிலைமை. இப்படி எத்தனையோ கஷ்டங்கள் சொல்லிலடங்கா. ஆகவே இவ்விடயத்தையும் கவனத்திற்குக் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவும்.

யாழ். குடாநாட்டிலும் குறிப்பாக வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்தும் படை நடவடிக்கைகளால் பெருந்தொகையான விவசாயிகள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில்தஞ்சமடைந்துள்ளனர். இம் மக்களின் காணி நிலங்களையும் வீடுகளையும் இழந்து குறிப்பிட்ட முகாம்களில் போதியளவு உணவு, குடிதண்ணீர், மருந்துவம், இடவசதி போன்ற குறைபாடுகள் நிலவுவதால் மக்கள் பெரும் சிரமங்களை நாளாந்தம் எதிர்நோக்கியவண்ணம் உள்ளனர். எனவே படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளிலும் குடியிருப்புக்களிலும் மக்களை மீள குடியேற்றி அவ் மக்கள் மீண்டும் விவசாயப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் கடனுதவி செய்து உதவ வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிககப்பட்டுள்ளது.

## தபால்பொதிகள் அனுப்பிவைப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு நோயாளர்களை ஏற்றிக்கொண்டு நேற்றைய தினம் புறப்பட்ட செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பலில் பிறமாவட்டங்களுக்குரிய 44 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

(க-14)

## வெற்றிக்கிண்ணப் போட்டி

(திருநெல்வேலி)

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற சங்கம் நடாத்தும் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளன, கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போட்டிகளே நாளை முதல் நடைபெறவுள்ளன.

ஆட்டங்களின் விபரம் வருமாறு—

★ காலை 8 மணி யாழ். பல்கலைக்கழகம்எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

★ பிற்பகல் 1 மணி கே. சீ. சீ.சி.வி, க. எதிர் மானிப்பாய் பரிஷ் வி. க.

## யாழ். பிரதம தபாலகத்திற்கு 30 சிற்றூழியர்கள் நியமனம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் நிலவிவந்த அஞ்சலக சிற்றூழியர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் புதிதாக 30 சிற்றூழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இப் புதிய ஊழியர்கள் சேவை மூப்பு ஓய்வு பெறல் மற்றும் ஊழியர் லீவுபோன்றவற்றினால் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப வேலைக்கு அமர்த்தப்படுவர்.

இவர்களுக்கான கொடுப்பனவு கடமை செய்யும் நாள்களுக்கு ஏற்ப நாள்சம்பள அடிப்படையில் வழங்கப்படுவதுடன் ஏனைய நிரந்தர சேவையில் உள்ள சிற்றூழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஊக்குவிப்புப்பணமும் வழங்கப்படுமென்று தெரிவித்த அவர் இவ் ஊழியர்கள் தினமும் அலுவலகத்திற்கு வருகைதர வேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-14)

## தைப்பூச உற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி / நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் தைப்பூச உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும்.

இவ்உற்சத்தில் வசந்தமண்டப பூசைகளை அடுத்து சுப்பிரமணியப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் திருமஞ்சத்தில் வெளிவீதி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறும். (க-14)

## சான்றிதழ் வழங்கல்

(புலோலி)

பருத்தித்துறை மாதனை கிராம அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கான 'துணி அச்சிடல்' பயிற்சி நெறியில்பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட யுவதிகளுக்கான சான்றிதழ்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இச் சான்றிதழ் வழங்கும் விழா மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி எஸ்.வளர்மதி தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேசச் செயலர் திரு.ஏ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். (க-52)

## 15 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தியில் இணைக்கப்பட்டுள்ளன

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களுக்கு மாதாந்தம் 250 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மேலும் 19ஆயிரம் குடும்பங்களும்சமுர்த்தித் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ல் வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது.

(க-77)

## சைவப் புலவர் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரால் நடாத்தப்படும் சைவப் புலவர், இளம் புலவர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு எதிர் வரும் 22 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது. என சைவப் புலவர் சங்கத்தலைவர் திரு. வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

(க-28)

## யாழ் குடாநாட்டில் சீரான மின்விநியோகம் ஏற்படுத்தப்படவில்லை

### யாழ். மாவட்டபுளொட்அமைப்பாளர்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1995 ஆம் ஆண்டு அரசபடைகளால்யாழ். குடாநாடு கைப்பற்றப்பட்ட பின்பு மக்களுடைய அத்தியாவசிய பிரச்சினைகள் ஓரளவே தீர்க்கப்பட்டன. குறிப்பாக மின்சார விநியோகம் சீராக மேற்கொள்ளப்படவில்லை என்றே குறிப்பிடவேண்டியுள்ளது.

புளொட்அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. இருதயராஜன் பிரதி பாதுகாப்பு அமைச்சரும், நிதி அமைச்சருமான ஜனரல் அனுருத்தரத்வத்தவிற்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்; குறிப்பாக தங்களுடைய அமைச்சின்கீழ்வரும் மின்சாரத்துறையின் யாழ். பிராந்திய, அலுவலகம் மின்சாரத்தை புனரமைப்பதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளது.

அதேவேளை அண்மைக்காலமாக காங்கேசன்துறையிலிருந்து மின்சாரம் வழங்கும் இயந்திரங்களில் சில பழுதடைந்து இருப்பதனால் மின் வழங்கல் சீராக நடைபெற முடியாமல் இருப்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதனால் மாணவர்கள் தொழில்நுட்கல்வியில் (COMPUTER) ஈடுபடுவோர், தொழிற்சாலை உரிமையாளர்கள், பொதுமக்கள் போன்றோர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். எனவே தாங்கள் இதற்கு உரியநடவடிக்கை எடுப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு துரிதகதியில் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன். இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## கொழும்பில் தேடுதல் தீவிரம் 60 தமிழர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு நேற்று முன் தினம் குண்டுப் பார்சல் ஒன்று அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, சில தினங்களாக ஓய்ந்திருந்த ஊரடங்கு உத்தரவுகளும், தேடுதல் நடவடிக்கைகளும் கொழும்பில் மீண்டும் தலைதூக்கி வருவதாக அறிய வருகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீர் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து தமிழர் வாழும் பகுதி வீடுகளுக்குச் சென்ற படையினரும் பொலிசாரும் 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை தேடுதல் என்ற பெயரில் கைது செய்தனர்.

இந்த கைது நடவடிக்கை ஆண், பெண், வயது வந்தோர், முதியோர் என்ற வேறுபாடின்றி இடம் பெற்றுள்ளது தெரிய வந்துள்ளது.

1000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், 200 இற்கும் மேற்பட்ட பொலிசாரும் பங்கு கொண்ட இந்த 5 மணிநேரத் தேடுதலில் கைது செய்யப்பட்டவர்களில் 60 பேர் தவிர மீதிப்பேர் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மிக அண்மையில் பிரதம மந்திரியின் செயலகத்துக்கு முன்னர் இடம் பெற்ற மனித வெடிகுண்டு தாக்குதலைத் தொடர்ந்து 12 மணிநேர ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து 3000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டமை அறிந்ததே. [க-9]

## கருத்தரங்கு

யாழ். புனித அன்னாள் ஆலய இளைஞர் உருவாக்க இயக்கத்தினரால், மாதாமாதம் நடாத்தப் பட்டு வரும் போயாதினக் கருத்தரங்கு இன்று நடைபெற மாட்டாது.

வரும் 26ஆம் திகதி அன்னாள் ஆலய முன்பள்ளி மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

இதில், அகவெளி நிலைய இயக்குநர் அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் அடிகளார் ''இளைஞர்களின் ஆளுமை'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கு!

## பாடசாலை உபகரணங்கள்

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை, வத்திராயன் மருதங்கேணி ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளில் வசித்துவரும் பாடசாலை மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்ளின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில்மேற்படி சமாசத் தலைவர் கு.வி.பாலசிங்கம் உட்பட கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(உ,க-43)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள் மிகு கந்த சுவாமி கோவில் மணவாளக் கோலவிழா எதிர் வரும் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

ஆயிரத்தெட்டு சங்காபிசேகம் இடம் பெறுவதுடன் விஷேட பூசை நிகழ்வுகளும் நடைபெறும்.

(க)

வவுனியா ப. நோ. கூ. சமாச

# பணிகள் குறித்து ஆராய்வதற்கு விசேட குழுவினர் நியமிக்கப்பட்டனர்

(வவுனியா)

யுத்த சூழலுக்கு மத்தியில் பல சேவைகளை மேற்கொண்ட வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சமாசத்தின் கடந்தகால செயற்பாடுகள் சட்டப்படி நடைபெற்றதா என்பதனை ஆராயும் முகமாக வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் இருவர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களிருவரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக்குழு, புதிய கிளைத் தேர்தலை நடத்தி நெறியாளர் சபையினைத் தெரிவு செய்யக்கூடிய சூழல் வவுனியாவில் உள்ளதா? என்பதனையும் ஆராயும் என வவுனியா கூட்டுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த பத்துவருடகாலமாக தேர்தல் நடைபெறாது நெறியாளர் சபைஇயங்கி வருகின்றது. ஆனாலும்வவுனியா ப. நோ. கூ. ச. சமாசமானது யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பல சேவைகளைச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமான அடிப்படையில் சட்டதிட்டங்களுக்கு அப்பாலும் பணியாற்றியுள்ளது. என வவுனியா அரச அதிபர் பொதுவைபவம் ஒன்றில் பாராட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-05)

## மட்டு, பல்கலைக்கழகத்திற்கு இவ் ஆண்டு 466 பேர் தெரிவு

[மட்டக்களப்பு]

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழத்தில் மட்டக்களப்பு பிரிவில் புத்தாயிரமாம் ஆண்டுக்கான பயிற்சிக்கென 466 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும்-

இவர்களுக்கான பதிவுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றதைத் தொடர்ந்து நேற்று இவர்களுக்கான பல்கலைக்கழகப் பிரவேசம் இடம் பெற்றுள்ளது எனவும் கடந்த காலங்களைப் போல் பகிடி வதைகளில் ஈடுபடாது புதிய மாணவர்களை அன்புடனும் பண்புடனும் வரவேற்கப் போவதாக சிரேஷ்ட மாணவர்கள் கூறியதுடன்;

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு, புதிய மாணவர்களை வரவேற்கும் வகையிலான நிகழ்வுகள் நடைபெற்றன; வடக்கிலும் கிழக்கிலும் தமது இனம் துன்ப துயரங்களை அனுபவித்து வரும் நிலையில் இந்த மாணவர்களை தமது சகோதரர்களாகவும், நண்பர்களாகவும் எண்ணி இம் மாணவர்களை வரவேற்பதாக சிரேஷ்ட மாணவர்கள் பலரும் மனம் திறந்து தமது கருத்துக்களைக் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இது பற்றி அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; எதிர் காலத்தில் இவ்வாறான நடைமுறை பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பெரும் வழிகாட்டலாக எதிர்காலத்தில் அமையும் எனவும் தெரிய வருகிறது.

[க]

## அமைச்சர் அஷ்ரப்பிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய ஆலோசனை

(கொழும்பு)

அமைச்சரும் கவிஞருமான எம். எச். எம் அஷ்ரப் எழுதிய கவிதை நூலில் புத்தபிரான் பற்றியும் பௌத்தமதம் பற்றியும் வெளியிடப் பட்டுள்ள கருத்துக்கள் தம்மை நிந்திப்பதால் அவருக்கு எதிராக குற்றவியல் கோவைபிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்குமாறு சட்டத்தரணி ஒருவர் தனது கட்சிக்காரர் சார்பில் சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கலாநிதி பியசேன திசநாயக்கா என்பவர் சார்பில் சட்டத்தரணி நலிந்த இந்த திஸ்ஸ என்பவரே இவ்வாறான கடிதத்தை சட்டமா அதிபருக்கு எழுதியுள்ளார்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி அமைச்சர் அஷ்ரப் ''நான் எனும் நீ'' எனும் கவிதை நூலை வெளியிட்டிருந்தார். இந்நூலில் புத்தபிரானும் கவிஞரும் எனும் தலைப்பில் அவர்எழுதிய கவிதையில் பௌத்தர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இக் கருத்துக்கள் புத்தரின் போதனைகளைப் பின்பற்றும் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கின்றன.

எனவே இச்சூழ்நிலையில் 1979 ஆம் ஆண்டு குற்றவியல் கோவை சட்ட ஏற்பாடு இலக்கம் 15, பிரிவு 135 இன் கீழ் வழக்குத்தொடர அனுமதி கோருகிறேன். என்று அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (க-14)

இலங்கையின்

## தேசிய உற்பத்திப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

(கொழும்பு)

இலங்கையின் தேசிய உற்பத்திப் பொருட்களான உருளைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கொடிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, பலாப்பழம் வெற்றிலை, பாக்கு மற்றும் வாசனைத்திரவியங்களை நவீன தொழில்நுட்பரீதியாகப் பாக்கெட் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சனச அமைப்பு வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளதாக அதன் தலைவர் பி.ர. கிரிவன்தெனியா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான திட்டத்தை செயல் படுத்துவதன் மூலம் கிராமிய விவசாயிகளுக்கும், மக்களுக்கும் நன்மையையும் வருமானத்தையும் பெற்றுக் கொடுக்க வழியேற்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க-14)

யாழ். குடாநாட்டில்

## 20 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் சொந்த இடங்களில் குடியமரவில்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 425 கிராம சேவையாளர் பிரிவுகளுள் 51 கிராம சேவையாளர்கள்பிரிவுகளைச் சேர்ந்த் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

இத்தகைய குடும்பங்கள் கடந்த நான்கு வருடங்களாக வாடகை வீடுகளிலும், இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இந்த வகையில் வலிகாமம் வடக்கில் 31 கிராம சேவையாளர் பிரிவுகளும், மருதங்கேணி—பளை பிரதேசத்தில் 14ம் அரியாலையில் 2ம் சண்டிலிப்பாயில் 4ம், கோப்பாயில் ஒன்றுமாக மொத்தம் 51 கிராமசேவையாளர் பிரிவுகளும் தமது சொந்த இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களிலேயே இயங்கிவருகின்றன.

இப்பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால்இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை 1670 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 677பேர் குடாநாட்டில் இயங்கிவரும் 50க்கும் மேற்பட்ட இடம் பெயர்ந்தோர்க்கான நலன் புரிநிலையங்களில் பல்வேறு விதமான கஸ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது,

தமது சொந்த இடங்களில் மீளவும் குடியேற அனுமதிக்கப்படாமல் இருக்கின்ற 20 ஆயிரம்குடும்பங்களைமீளவும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த பல்வேறு மட்டங்களிலும் எடுக்கப் பட்ட முயற்சிகள் எதுவும் சாத்தியப்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இக்குடும்பங்களில் இருக்கின்ற பிரதான உழைப்பாளர்கள் போதிய உழைப்பு இல்லாமல்இருப்பதால்அரசின் நிவாரணத்தையே நம்பி இருந்துவருவதாகவும் கூறப் படுகின்றது.

அத்துடன் இக்குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை எனவும் அறியப்படுகின்றது.

(க-77)


உ
சிவமயம்

# மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தைமாதம் 6ம்நாள் (20 - 01 - 2000)
வியாழக்கிழமை பகல் 1.26 முதல் 2.04 (பழைய நேரம்)
வரையுள்ள ரிஷபலக்கினமும் புனர்பூச நட்சத்திரமும்
சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த
நல்வேளையில்.



யாழ்ப்பாண வணிக நிலையத்தின் சக நிறுவனமான

# யாழ்ப்பாண இரும்பகம்
# JAFFNA HARDWARE



என்னும் ஸ்தாபனத்தினை திறந்து நடாத்த இறையருள்
கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப
சமேதரராய் வருகை தந்து வளம்பெற்று
வளர வாழ்த்தியருளும் வண்ணம்
வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை வேண்டி நிற்கும்

பரராஜசிங்கம் ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன்

யாழ்ப்பாண இரும்பகம்
168, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண வணிக நிலையம்
302, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P: 2509, 2806

[000111]


## ( இராசி பலன் )

20 - 01 - 2000
வியாழக்கிழமை
(தமிழுக்கு தை 06)

சதுர்த்தசி நண்பகல் 1-56 வரை; திருவாதிரை காலை, 7-48 வரை பின் புனர்பூசம் முழு நாளும் இராகு காலம் பகல் 2-55 முதல் 4-02; சுபநேரம் காலை 8-55 முதல் 10-05 வரைபூரணை விரதம்.

**மேடம்:**
அறிஞர் சந்திப்பு, கலையுணர்வு, நன்மதிப்பு.

**இடபம்:**
தவறான நடத்தை, தாயார் சினம், மனச்சுமை.

**மிதுனம்:**
வாக்குவன்மை, புதிய பதவி, நண்பர் கலகலப்பு.

**கடகம்:**
சஞ்சல உணர்வு, பிரிவு வாட்டும், வஞ்சனை.

**சிங்கம்:**
இனிய காட்சி, நினைத்தது கைகூடும், பணவரவு.

**கன்னி:**
மனமகிழ்ச்சி, திருமண யோகம், கற்பனை.

**துலாம்:**
துயரமான செய்தி, வீண் செலவு, பதட்டம்.

**விருச்சிகம்:**
விவாதம், பழிவாங்கல், அன்னியர் பகை.

**தனுசு:**
தியாக உணர்வு தொழில் லாபம், விருந்துண்ணல்.

**மகரம்:**
சகோதரர் பாசம், கடன் வரவு, பணியாளர் நன்மை.

**கும்பம்:**
கடிதபகை, வீண் கலவரம், குடும்ப வேற்றுமை.

**மீனம்:**
தப்பபிப்பிராயம், விலகிப் போதல், குறை கேட்டல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## ஊர்காவற்படை சூட்டுக்கு பலி

[ஏறாவூர்]

கல்முனை நற்பிட்டி முனையில் ஊர்காவற்படை வீரர் ஒருவர் கடந்த செவ்வாய் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் இணை சேவையாற்றி வந்த 22 வயதான எம். எம். யங்கர் என்ற இவர் வீட்டில் இருந்து கடமைக்காக சென்று கொண்டிருந்த வேளை வழிமறிக்கப்பட்டு சுடப்பட்டார். இவரது உடலில் ஆறு சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொள்கின்றனர். [க]

## திக்கம் பகுதியில் மீனவர் கைது

அவசர காலத் தடைச் சட்டத்தை மீறிய குற்றத்தின் பேரில் நான்கு மீனவர்கள் திக்கம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு.

பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்தசுப்பிரமணியம்நவேந்திரன் (வயது 25), சூசைப்பிள்ளை அன்ரன் ரனிதாஸ் (வயது20), திக்கத்தைச் சேர்ந்த சேனாதிபதி ஜெகா (வயது 23), துரைராசா ராசன்(வயது24) ஆகியோரே கைது செய்யப்பட்டு பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(க)

# இருபதாம் நூற்றாண்டின் நிறைவிலும் இலங்கையின் கல்வியடைவின் சமச்சீரின்மை - ஒரு கண்ணோட்டம்

கணிதத் துறையில் தனக்கென ஒரு இடத்தை வகிப்பவரும், முதுதத்துவமாணியும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளருமான திரு. த. காங்கேசபிள்ளை, கடந்த பல வருடங்களாக இலங்கையின் கல்விப்புலத்தை ஆய்வுசெய்து நன்கு அனுபவம் பெற்றவர்.

எமது கல்விச் சமூகத்தின் நன்மை கருதி அவரது கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

(ஆ-ர்)

- த. காங்கேசபிள்ளை -
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)

(1)

எந்த ஒரு சமூகத்தினது எதிர்காலத்துக்கும், நல்வாழ்விற்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. கல்வியினால் உருவாக்கப்படும் மனிதவளமே ஒரு சமுதாயத்தின் பெறுமதிமிக்க வளமாகும். 20 ஆம் நூற்றாண்டு முடிவடைந்து விட்டது. எத்தனையோ கல்விச் சீர்திருத்தங்களும் வந்து போய்விட்டன. இவற்றின் மூலம் செயற்படுத்தப்பட்ட கல்விமுறைமைகள் மக்களின் தேவைகளுக்கு முகங்கொடுக்கவோ, ஒவ்வொருவரினதும் பொருளாதார விரிவாக்கத்துக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யவோ 21 ஆம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்நோக்கக் கூடிய முறையில் மக்களை உருவாக்குவதிலோ, வெற்றி காண்பதில் உதவி புரியத் தவறி விட்டன. எமது சமுதாயத்தில் நிலவிவரும் பிரிவுகள், கல்விக்கான வாய்ப்புகளின் பரம்பலில் காணப்படும் சீரிய வேறுபாடுகள், வசதிபடைத்தோரின் முன்னேற்றத்துக்குரிய சான்றிதழ்களை மையமாகக் கொண்டு இயங்கும் ஒடுங்கிய கல்வித்துறையின் நோக்குகள் உண்மையில் கல்வியின் அடைவில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

மூன்றாம் உலகின் அபிவிருத்தி முயற்சிகள் அபிவிருத்திப் பிரச்சனைகளின் ஓரத்தை மட்டும் தொட்டுள்ளது. இதனால் பெறக்கூடிய வளங்களும், சேவைகளும் இல்லாதவர்களுக்கு எதிராக முனைவுபடுத்தப்பட்டும், சாய்ந்தும் உள்ளன. அபிவிருத்திக்கெதிரான முக்கிய தடைகளில் ஒன்று இவ் வில்லாதோரின் உள்ளார்ந்த ஆற்றல்களின் உணர்வின்மையாகும். பொதுவாகக் கல்வியும் குறிப்பாக 5 முதல் 14 வயது வரையான பொதுக்கல்வியும் இம்மக்களிடையே உணர்வை உருவாக்குவதற்கான ஒரு சாதனமாகும். ஆசிய நாடுகளுள் இலங்கை இப்பணிக்குதனதுகவனத்தை நீண்டகாலமாக செலுத்தி வரும் ஒரு நாடாகும். எனினும் கல்வியை சனநாயகப்படுத்தல் இதுவரை அளவுசார் விரிவாக்கத்திற்கே வழிப்படுத்தியுள்ளது. பண்புசார் அம்சங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இன்னும் குறைக்கப்படவில்லை. இதற்கு சமூகபொருளாதார காரணிகளும் கல்விசார காரணிகளும் துணைபோகின்றன. எனவே இக்காரணிகள் பற்றி நோக்குவது இன்றியமையாததாகும்.

## சமூக பொருளாதார கலாச்சார காரணிகள்

### மனிதவளங்கள்:-

கல்வியின் முன்னேற்றம் அதன் முழுமையில் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் குறிப்பான இடத்தைக் கொண்டுள்ளது. மனிதனின் அபிவிருத்தி கற்றலிலிருந்து வெளிப்படுகின்றது. அளவுசார், பண்புசார் கல்விக் குறைபாடுகளுக்கான ஒரு முக்கிய பரிகாரம் அடிப்படைக் கல்வியின் கட்டாய அதிகரிப்பேயாகும். அறியாமை மக்களை ஒரே நிலைகளுக்கு ஒதுக்கிவிடும். இதனால் அவர்களது சொந்த அபிவிருத்திக்குக் குறைவான நன்மைதரும் மிகஎளிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் கூட இடற்படுவர். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இலவசக் கல்விமுறைமை தொடர்கின்றது. இதன் விளைவாக எழுத்தறிவு வீதம் ஏறத்தாழ 90%மாக காணப்படுகின்றது. ஆனால் கல்விமுறையின் ஒவ்வொரு மட்டத்திலும் பாரதூரமான குறைபாடுகள் காணப்படுகின்றன. இது தொடர்பான புள்ளிவிபரங்கள் ஓர் வருந்தத்தக்க நிலையையே காண்பிக்கின்றன. கட்டாயக்கல்வி பெறவேண்டிய வயதுடைய பிள்ளைகளில் ஏறத்தாழ 14% மானோர் பாடசாலைக்குச் செல்வதில்லை. 5 ஆம் தரத்திலுள்ள பிள்ளைகளில் 20% மானோர் மாத்திரம் எழுத்தில் அடையவேண்டிய திறமை நிலையை அடைந்தவராயும், அதனிலும் குறைந்த வீதத்தினரே கணிதத்தில் அம்மட்டத்தை அடைந்தவராயும் காணப்படுகின்றனர். 1995 ல் நடைபெற்ற கல்விப்பொதுத்தராதர சாதாரண தேர்வில் 10% மானோர் எட்டுப்பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர். இதேபோல் கல்விப்பொதுத்தராதர உயர்தரத் தேர்வில் 9% மானோர் நான்கு பாடங்களிலும் சித்தியடையத்தவறியுள்ளனர்.

இலங்கையில் ஏறத்தாழ 90% மானோர் எழுத்தறிவு தெரிந்தவர்களாக காணப்பட்ட போதிலும் இவர்கள் உண்மையில் விரயமான தலைமுறை எனக்கருதப்படுகின்ற 'எழுத்தறிவுள்ள எழுத்தறிவற்றவர்கள்' எனக்கருதலாம். இவர்கள் உண்மையில் தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு பிரயோசனமற்ற கல்வியைப் பெற்றவர்களாவர். இது ஆரம்பக் கல்வியின் தோல்வியிலிருந்து உருவாவதோடு கிராமப்புறங்களிலுள்ள வளங்குறைந்த சமூகங்களில் மிக உக்கிரமாக உள்ளது. இவ்வெழுத்தறிவுள்ள, எழுத்தறிவற்றவர்கள் மிகச்சிறிய பொருளாதார நெருக்கடியின் போது கூட முதலில் பாதிக்கப்படும் மிகப்பலவீன மானவர்கள் ஆவார். இத்தொகுதியினர் 'நவீன முடிவெடுக்கும் முறையில்' நிறைந்திருக்கும் எழுதப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான வாசிப்புத் திறன்களையோ, எழுத்துத் திறன்களையோ பெறாதவர்களாவர். பாடசாலையை இடையில் விட்டுச் செல்லுதலும், செயற்பாட்டு எழுத்தறிவின்மை ஆகியன இவ்வெழுத்தறிவின்மையுடன் தொடர்புடைய பிரச்சனைகளாகும்.

இவ்வெழுத்தறிவின்மை மனித இடைவெளி ஒன்றை உருவாக்கியுள்ளதோடு இதனை ஒளித்துக்கட்டுவதற்கான எவ்வித தீவிர முயற்சியும் இலங்கையில் எடுக்கப்படவில்லை எனலாம். எழுத்தறிவு என்பது எழுத வாசிக்கக்கூடிய திறனை விட மேலானதாக இருப்பதோடு உணர்வாற்றலின் அபிவிருத்திக்கு வழி வகுப்பதாகவும், சமூகத்தில் பயனுடையதாகவும், ஆக்கபூர்வமாகவும், பங்குபற்றுவதற்குரிய தகுதியை அதிகரிப்பதாகவும் இருக்கவேண்டும். இவ்வெழுத்தறிவு வளர்ந்தோரை உற்பத்திமிக்கவர்களாக ஆக்குவதுடன் அபிவிருத்தி உள்ளீடுகளில் ஒன்றாகவும் ஆக்கும். மேலும் மக்களிடையே தொடர்புகொள்ளலிலும், சமூக நடவடிக்கைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் பங்குபற்றல் ஆகியவற்றையும் ஏற்படுத்தும் இவ் எழுத்தறிவுக் குறைபாடு வறுமையை நிலைத்திருக்கச் செய்யும் ஒரு தனிப்படுத்தல் எனலாம். இதனால் சக்தி வாய்ந்தவர்கள் என்ன செய்கின்றார்களென அறியமுடியாதுள்ளது.

எனவே ஒரு தேசத்தின் அபிவிருத்தியில் மனித வளங்கள் முக்கிய பங்களிக்கின்றன. மனித வளங்கள் ஏனைய காரணிகளை உருவாக்கி உந்துவிக்கும் செயலாற்றல் மிக்கதாகும். இதற்கு மனிதத் திறன்களே அடிப்படையாகும். மனிதத் திறன்களை அபிவிருத்தி செய்யும் சக்திவாய்ந்த நிறுவகப்படுத்தப்பட்ட பொறிமுறையை கல்விமுறைமை அமைக்கின்றது. இதனைக் கொள்கையாகக் கொண்டே எம் நாட்டிலும் சர்வசன பொதுக்கல்வியை அடைவதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் இலங்கையின் எல்லாப் பகுதிகளையும் சென்றடைந்துள்ளதா?

### இசைவாக்கமின்மை

கல்வியானது வளர்முக நாடுகளில் அரசாங்க மீள் செலவுகளில் பெரும்பங்கை உறிஞ்சுவதோடு பெருந்தொகையான மாணவர்களது காலத்தையும் செயற்பாடுகளையும் எடுக்கிறது. அத்துடன் அபிவிருத்தி அபிலாசைகளின் அதியுயர் உளவியல் சுமைகளையும் தாங்குகின்றது. எனவே மக்களின் பொருளாதார தேவைகளுக்கும், அபிலாசைகளுக்கும் பொருந்தக்கூடியவாறு கல்வி முறைமையை இசைவாக்குவதற்கான பெரும் தேவை உண்டு.

முறைசார்ந்த கல்விக்காக பல தசாப்தங்களைச் செலவிட்டும், பலகோடிரூபாய்களை செலவிட்டும் செலவிடப்பட்ட பணத்திற்கு ஈடாக இலங்கையில் சராசரிப் பிரஜையின் நிலை மேம்பட்டுள்ளதா? ஆனால் இக்கல்வி முறைமை தனிநபர்களில் மாத்திரம் விழுமியங்கள், மனப்பாங்குகள், அபிலாசைகள் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசியஅபிவிருத்தி தொடர்பாக கல்வியில் மிகக்கூடிய குறைசீராக்கம் அநேகமாக கிராமியப் பாடசாலைகளிலேயே காணப்படுகின்றது. அதாவது இலங்கையின் கல்வி முறைமை வருமான சமனிலிகளைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிப்பதற்குத் தொழிற்பட்டுள்ளது. வருமானப் பரம்பலின் மேல்முறை சார்ந்த கல்வி செலுத்தும் இத்தாக்கத்திற்கான அடிப்படைக் காரணம் ஒருவரின் மட்டத்திற்கும், அவரது வாழ்நாள் வருமானத்துக்கும் இடையேயான நேர் இணைப்பேயாகும். இவ்வாறான சில காரணிகளால் வறியோருக்கு உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதோடு உண்மையில் கல்விமுறைமையே இலங்கையில் கல்வியில் சமனிலியை உருவாக்கியுள்ளதுஎன்பதற்கு இரு கருத்துக்கள் இருக்கமுடியாது. வறியவர்களே முதலில் கல்வி முறைமையை விட்டு வெளியேறுகின்றனர். ஏனெனில் அவர்கள் வாழ்வதற்காக உழைக்கவேண்டி இருப்பதுடன் தமது பிள்ளை நிலையான எளிய தொழிலொன்றைப் பெற போதுமான கல்வியை வழங்குவதற்கு அவர்களுக்கு முடியாதிருப்பதோடு இடைநிலைக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கவும் முடியாதிருக்கின்றது. இதனால் வறியவருக்கு ஆரம்பக் கல்வியைக்கூட பெறும் நம்பிக்கை இழந்துவிடுகின்றது.

கல்வி இலவசமாக இருந்த போதிலும் வறிய பிள்ளையின் பாடசாலைக் காலத்திற்காக 'சிரம காலத்தை' இழக்க நேரிடுகின்றது. இது குடும்பத்திற்கு ஓர் இழப்பெனவும், வறிய மாணவருக்கு ஆரம்பக் கல்வியின் எதிர்பார்த்த பயன்கள் மிகக் குறைவாகவும் உள்ளது என 'ரொடறோ' என்னும் கல்வியியலாளர் கூறுகின்றார். எனவே அவர்கள் பாடசாலையை விரைவில் இடையில் விட்டுச் செல்கின்றனர். இவ்வாறு இலவசக்கல்வி, சர்வசன ஆரம்பக்கல்வி இலங்கையில் இருந்த போதிலும் வசதி குறைந்த கிராமப்புற பிள்ளைகள், வளம் குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் உயர் கல்விக்கு செல்வதுமிகக் குறைவாகும். ஆனால் அவர்களது பாடசாலையில் ஒப்பீட்டளவான தாழடைவு அறிவுசார் ஆற்றல்களின் குறைவுகளுடன் எவ்விதத்திலும் தொடர்புபட்டதல்ல எனவும் 'ரொடறோ' கூறுகின்றார். எனவே சமனில் வருமானப் பரம்பல் இடை, உயர் கல்வி நிலைகளில் சமனிலியை அதிகரிப்பதற்கும் வறுமையை நிலைப்படுத்துவதற்கும் தொழிற்படுகின்றன எனக் கருதலாம்.

(மிகுதி நாளை தொடரும்)

## வலம்புரி - மழலைக்கு மாதமோ ஒன்று

வலம்புரியே பிறந்தநாள் சென்ற வருடத்தின் இறுதியிலே
மாதமோ ஒன்றாகிறது மதிப்போ அவளுக்கு உயர்கிறது
பிறந்த அன்றே பேசினர் பெருமை சேர்ப்பாள் மண்ணுக்கென்று
நடுவுநிலை தவறாத நற்பண்பு அவள் உயரிய கொள்கைஜென்று
உரிமையான பெற்றவர்கள் உறுதியுடன் செப்புகிறார்.

உண்மையைச் சொல்வதற்கு ஒருத்தி பிறப்பாளா - என
ஏங்கித்தவித்திருந்த எமக்கு இனிப்பாக ஈழத்திலே
ஏந்திளையாள் பிறந்து விட்டாள் எளிமையாக பிறந்து - விட்டாள்
கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற முதுமொழிக்கு
ஏற்பாக அவதரித்த ஆரணங்கே ஆரமுதே அஞ்சுகமே நீ வாழி

இக்கவிதை எழுதுகையில் உன்கடிதம் நாம் கண்டோம்
உன்னை அழிப்பதற்கு ஒருகூட்டம் முயல்வதாக உன் -
கடிதம் செப்பியதை கண்கலங்க நாம் அறிந்தோம்
நியாயம் நீதி என்று நிறைவாக நீ நடந்தால்
கண்ணன் உன்னைக் கைவிடான் கண்மணியே கலங்காதே.

கண்ணனை கம்சனால் அழிக்கத்தான் முடிந்ததா
கம்சன்தான் இறுதியில் கண்ணனால் அழிந்தான்
மக்களை சுரண்டாமலும் மக்கள் மனமறிந்தும்
மக்களை மகிழ்விக்க மனதார நீ உழைத்தால்
கலியுகத்திலும் கண்ணன் தன் வலம்புரியை காப்பான்.

காரைர சி. சிவபாதம்.

## கள்வர்களின் கைவரிசையினால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம்

[அச்சுவேலி]

அச்சுவேலியின் கிழக்குப்புற விவசாய விளைநிலப் பிரதேசங்களான நாச்சிமார் கோயில், பன்னாலை, செம்பியன் திடல், விளுப்பாக்காடு போன்ற பகுதிகளில் இரவு நேரக் கள்வர்களின் தொல்லையினால் அச்சுவேலி தெற்குப் பகுதி விவசாயிகள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ் விளைநிலப் பகுதிகள் இராணுவ முன்னரங்க காவல் நிலை மண்ணரணுக்கு வெளியே அமைந்திருப்பதால் முன்னைய காலங்களைப் போல் அப்பகுதிகளில் விவசாய விளை பொருட்களை பாதுகாப்பதற்காக இரவுக் காவலில் ஈடுபட முடியாது உள்ளதாக தெரிவித்துள்ள விவசாயிகள் கள்வர் கைவரிசையினால் தாம் பயிர்ச்செய்கையில் போதிய வருமானத்தை எட்ட முடியவில்லை எனவும். மேலும் தெரிவித்துள்ளார்ர

இதேவேளை இந்தப் பிரதேசங்களில் பெரும்போக பயிர்ச்செய்கையில் மட்டுமே விவசாயிகள் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (சு-14)

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.
- குறள்

# வலம்புரி

## உரிமைப்பயணம்

தமக்கெனத் தனித்துவங்களைக் கொண்ட மக்கள் குழுமங்கள் பல வாழ்கின்ற நாடு நம் நாடு. தேசியம் என்பதற்கு வரையறை வகுக்கும் அறிஞர்கள் மொழியால், இலக்கியத்தால், வரலாற்றால், பாரம்பரியத்தால்அல்லதுஇவற்றை ஒத்த ஏனைய அம்சங்களால் இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட ஏனைய குடித்தொகைக் குழுமங்களிலிருந்து வேறுபட்ட ஒரு சனத்தொகைக் குழுமமாகும் என்கின்றனர்.

இந்த வகையில் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைகின்ற வரலாற்றுப் பின்னணி மிக்க தமிழர்கள் தம் உரிமைப் பயணத்தை தொடர்கின்ற நிலை. உரிய உரித்தான உரிமையைப் பேணக் கொடுக்கின்ற- கொடுத்த விலைகள் பெறுமதி மிக்கவை.

தன்னிலை தாழாமை தாழ்ந்த பின் வாழாமை என்ற பொய்யில் புலவன் கூற்று எம்மைத் தொடர்ந்து நெறிப்படுத்த வேண்டும். அந்த உண்மையை நாணயத்தின் மறுபக்கமான பெரும் பான்மையினர் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப்புரிந்துணர்வு வெகு விரைவில் புலர வேண்டும்.

அரசியல் வடிவமாகத் தம்மைத்தாமே அமைத்துக் கொள்கின்ற, சுதந்திரமான அல்லது சுதந்திரத்தைஅடைந்துகொள்கின்ற விருப்பத்தைக் கொண்ட மக்கள்குழுமம் தேசியம் என்பது ஜோன் ஸ்ருவாட்மில்லின் கருத்தாழம் மிக்க கூற்று. இவையாவும் வெறும் சொற்களாய், கற்களாய் கருத்துணரா நிலையில் இருப்பதே இன்றைய அவல நிலைக்குக்காரணமாகும்.

உயிரினும் பெரியது ஒன்று இன்றைய நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. வள்ளுவன் ஒழுக்கத்தைச் சுட்டியது ஞாபகம் தான். இருப்பினும் எதிர்கால வனப்புமிக்க வாழ்வியலைச் சூனியமாக்கிக் கொண்டு உரிமைப் பயணத்தைத் தொடர்வதற்கு உயிரை ஆகுதியாக்குவது கண்கூடு.

இலட்சியம் உயரியதாய் இருக்கின்ற வரை எட்டப்படுவது இன்பமே. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் என்ற வள்ளுவம் உள்ளுதோறும் வலிமை தரட்டும்.

அன்புடன் ஆசிரியர்

இந்தியாவில்

# தொடரும் வேலை நிறுத்தத்தால் தினசரி செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

[புதுடில்லி]

இந்தியாவில் சுமார் ஒரு லட்சம் துறைமுக ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிப்படைந்திருக்கும் துறைமுக சேவைகளை நடத்துவதற்காக இந்திய அரசு கடற்படையினரதும் பொலிஸாரதும் உதவியை நாடியுள்ளது.

கல்கத்தா துறைமுகத்தில் தொழிலாளர்கள் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் உத்தியோகத்தர்களை அலுவலகங்களுக்குள் செல்வதை தடைசெய்ய முற்பட்டதை அடுத்து அங்கு பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் இவ் வேலை நிறுத்தம் காரணமாக முக்கிய 11 துறைமுகங்கள் சீராக செயலாற்ற முடியாத இக்கட்டான நிலையில் இருக்கிறது. இதனால் துறைமுகங்களில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணி 50 வீதம் பாதிப்படைந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்கள் தொடர்ந்தும் தமதுபோராட்டத்தை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தும் நோக்குடன் செயலில் இறங்கியுள்ளதால் நாட்டின் பல முக்கிய துறைமுகப்பகுதிகளிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஆங்காங்கே சில கலவரங்கள் இடம் பெறக் கூடும் என்ற நோக்கில் மேலதிக பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் துறைமுக ஊழியர்களுக்கு 28 சதவீத சம்பள உயர்வை வழங்க முன்வந்துள்ள போதிலும் தொழிலாளர்கள் தமது சம்பளத்தை இரண்டு மடங்காக்க வேண்டும் என்று கோரியே இந்த காலவரையறையற்ற போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றுமேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-14)

# மேலதிக படையினர் குவிப்பு

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் மொலுக்காஸ் தீவுகளில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக இடம் பெற்றுவரும் வன்முறைகளை அடக்கும் முகமாக மேலும் ஆயிரக்கணக்கான படையினர் விமானம் மூலம் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (க-14)

# விமானப்படை அதிகாரிக்கு 17 வருடசிறைத் தண்டனை

(பீஜிங்)

சீனாவின் தடைசெய்யப்பட்ட பாலுங்கொங் மதப்பிரிவினருடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி ஒருவருக்கு 17 வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையில் உள்ள பலருக்கு பயிற்சிகளை வழங்கியுள்ள இந்த சிரேஷ்ட அதிகாரி இராணுவ நீதிமன்றில் இரகசிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஹொங்ஹொங்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

74 வயதான யூசாங்கின் என்ற இந்த அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையே பாலுங்கொங் பிரிவினருடன் தொடர்புடைய ஒருவருக்கு இதுவரையில் வழங்கப்பட்ட கடுமையான தண்டனை என்றும் இதனால் பலஓய்வு பெற்ற சீனப்படை அதிகாரிகள் கோபம் அடைந்திருப்பதாகவும் சீனாவின் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்குமான அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை சிறையில் உள்ள இந்த அதிகாரி ஒரு அமைச்சரின் அந்தஸ்துக்கு உரியவராக இருந்தார் என்று சீனாவில் தடைசெய்யப்பட்ட பாலுங்கொங் அமைப்பைச்சார்ந்தவர்என்று கூறி சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்களில் இவரே மிகவும் மூத்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

துருக்கியில்

# ரோந்து சென்ற படையினர் மீது தாக்கு போராளிகள் உட்பட 7 பேர் பலி

(திரிப்போலி)

துருக்கியில் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியினால் கைவிடப்பட்ட குர்திஸ் கெரில்லாக்கள் ரோந்து சென்ற படையினர் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியதில் 5 கெரில்லாப் போராளிகள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று துருக்கியின் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைக் கைவிட்டு துருக்கியிலிருந்து வெளியேறுமாறு தனது சகாக்களுக்கு மரணதண்டனைவிதிக்கப்பட்டுள்ள குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஒகலான் இட்ட கட்டளையை மீறி சவால்விடும் முகமாக அவர்கள் இத் தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கு எதிராக துருக்கிப் படையினர் வான் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களைப் பின்வாங்கச் செய்துள்ளனர்.

தப்பியோடிய கெரில்லாக்களினால் இந்தப் பிராந்தியத்தில் வன்முறைகள் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி எச்சரிக்கை செய்த மூன்று நாள்களின் பின்னர் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

# பங்களாதேஷில் வேலைநிறுத்தம் சிட்டகொங் செயலிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை அடுத்து முக்கிய துறைமுக நகரான சிட்டகொங்கில் ஏற்பட்ட பல்வேறு கலவரங்களில் சுமார் 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலவரத்தினால் கடைகள் மூடப்பட்டுள்ளதுடன் நகரம் போக்குவரத்து வசதிகளின்றி வெறிச்சோடிக் காணப்படுவதாயும் கூறிய இவர் மேலும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அவற்றை தடுக்கக்கூடிய வகையில் ஆயிரக் கணக்கான பொலிசாரும் இராணுவமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (க-14)

தமிழகத்தில்

# கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கும் எமக்கும் 'தொடர்பு எதுவும் இல்லை

## -டக்ளஸ் தெரிவிப்பு-

(சென்னை)

தமிழகத்தில் கியுபிரிவு பொலிஸாரினால்கைது செய்யப்பட்டஐவரும் ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து வெளியேறியவர்களாவர். இவர்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை.

தமிழகத்தில் வைத்து கடந்த 6ஆம் திகதி கைது செய்யப்பட்ட 5ஈ.பி.டி.பி.அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் தொடர்பாகக் கேட்டபோது ஈ.பி.டி.பி. செயலாளர்நாயகமும்யாழ். மாவட்ட எம்பியுமான திரு. டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதுக்கோட்டைமாவட்டம், கோட்டைபட்டினத்துக்கு படகில் சென்றபோது இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடம்இருந்து ஏ.கே.47 ரக துப்பாக்கி உட்பட 8 துப்பாக்கிகள் இருந்ததாகவும்அங்கிருந்துகிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டோரின் விபரம் வருமாறு:

முரளிதரன் (வயது 24), கணேசராசா என்கிறஅசோக் (வயது19), யோர்ஜ்வயது21, (ரதீஸ்வயது21), கமல்(வயது 24) (க)

# இராணுவ நோக்கை அடைவதற்காக எமது பிரஜைகளை கொல்லமுடியாது

## ரஷ்யபதில் ஜனாதிபதி தெரிவிப்பு

(மொஸ்கோ)

செச்சினியாவில் இருக்கும் மக்கள் எமது பிரஜைகள் எமது இராணுவ நோக்கத்தை அடைவதற்காக அவர்களைக் கொல்ல முடியாது.

இவ்வாறு ரஷ்ய பதில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தொலைக்காட்சி மூலம் விடுத்த செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஆதரவைப் பெறுவதன் மூலமே செச்சினியாவை நாம் வெற்றிகொள்ள முடியும். மாறாக குண்டு மாரி பொழிவதனால் எதையுமே சாதிக்க இயலாது என்றும் ரஷ்ய பதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவரது கூற்றுக்கு சற்றும் பொருத்தமற்ற வகையில் குரொஸ்ணியில் ரஷ்ய துருப்பினர் கைப்பற்றிய பகுதிகளில் வீடுவீடாகத் தேடுதல்கள் நடாத்துவதாகவும், விமானத்தாக்குதல் பரவலாக இடம்பெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-06)

35 வயதிற்கு மேற்பட்ட

# உதைபந்தாட்ட வீரர்களுக்கு உலக கிண்ணப்போட்டிகள் நடாத்த திட்டம்

(லண்டன்)

சர்வதேச கால் பந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத்தின் பழம் பெரும் கால்பந்தாட்ட விற்பன்னர்களுக்கான சுற்றுப் போட்டியொன்றை நடாத்த எண்ணியுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் கால் பந்தாட்ட வரலாற்றின் தலைசிறந்த வீரராக கருதப்படும் பேலே உட்பட தலைசிறந்த வீரர்கள் பலர் கலந்து கொள்ள வேண்டும் என சர்வதேச சம்மேளனம் விரும்புகிறது.

இச் சுற்றுப் போட்டியை நடாத்த ஃபீஃபா ஆராய்ந்து வருவதாக அதன் உபதலைவர் அன்டோனியோ மட்ரெஸே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அநேகமான நாடுகள் 35 வயதுக்கு மேற்பட்ட வீரர்களுக்காக லீக் சுற்றுப் போட்டிகளை ஒழுங்கு செய்து வருகின்றதனால் இவ் வீரர்களுக்கு சர்வதேச மட்டத்திலான போட்டிகள் குறைவாயுள்ளதாகவும் தெரிவித்தார். (க - 29)

# நிலக்கண்ணிவெடி அகற்றும் பணியில் ஜப்பான் நாடு அதி தீவிர முயற்சி

[டோக்கியோ]

ஜப்பானிய தற்காப்பு தரைப் படையினர் தங்கள் வசமுள்ள சுமார் 10 இலட்சம் நிலக்கண்ணிவெடிகளை அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

மிதிவெடியை முற்றாகத் தடை செய்யும் ஒப்பந்தத் திற்கமைய இந்நடவடிக்கை கடந்த ஆண்டு முதல் ஜப்பானில் அமுலில் இருந்து வருகிறது.

இதேவேளை உலகெங்கிலும் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிக்கு உதவி வழங்கத் தாம் தயாரென ஜப்பானியப் பிரதமர் கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (க-9)

# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச அமைப்பு உதவவேண்டும்

## பதில் துணைவேந்தர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

நாம் பல்வேறு விதமான புனரமைப்பு புனர்வாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆழமாகவும்- நீளமாகவும் கலந்தாலோசிக்கலாம். ஆனால் இவை யாவும் யதார்த்த நிலையில் எமது மக்களின் நல்வாழ்வுக்கு உதவிட வேண்டுமாயின், மிகஅவசரமாக இந்த நாட்டில் சமாதானம் நிலைபெற வேண்டும். எனவே யாழ்ப்பாணத்தில் தற்போது நிலைகொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளும் மற்றும் சர்வதேச நிறுவனங்களும் உரியவர்களுக்கு வேண்டிய அழுத்தங்களைக் கொடுத்து சமாதானம் ஏற்பட உதவ வேண்டும். இது தான் இன்று மிக அவசியமாக எம்மக்களுக்குத் தேவையான ஒன்றாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் பஸ்ரியன் மண்டபத்தில் அரசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் புனரமைப்பு நிவாரணம் மீள்சமரச நடவடிக்கைகள் தொடர்பாக நடத்தப்பட்ட மூன்றாம்கட்ட ஆய்வுப் பட்டறையின் போது குறிப்பிட்டார்.

இணையத் தலைவர் திரு பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுப் பட்டறையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், செயர், போரூட், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக கல்வியாளர்கள் பலரும் பங்குகொண்டிருந்தனர்.

இணையத் தலைவர் தமது தலைமையுரையில்: குறிப்பிடுகையில், யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த நான்கு வருடங்களாக மக்களுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உத்தியோக பூர்வமாக அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையைப் பயன்படுத்தி பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம சேவையாளர் மட்டங்களிலுள்ளகிராமியமட்ட அமைப்புக்கள் மூலம் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் திட்டங்களுக்குரிய பயனாளிகள் தெரிவில் பல குறைபாடுகள் காணப்பட்டன. அதன் காரணமாக உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பயன் பெறவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. அத்துடன் செயல்ப்படுத்தப்பட்ட திட்டங்களில் பல பின்னடைவுகள் காணப்பட்டுள்ளன எனக் கூறினார்,

இந்த ஆய்வுப்பட்டறையின் போது ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் தமது செயற்பாடுகள் தொடர்பாக நோக்கப்பட்ட பின்னடைவுகள், தடைகள், தாமதங்கள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர்.

மேலும் தேசிய மட்டத்தில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய வழிவகைகள்பற்றியும், குடாநாட்டு மக்கள்மத்தியில் சமரச சிந்தனைகள், நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் பற்றியும் ஆய்வுப்பட்டறையில் பங்கு பற்றுனர்கள் மத்தியில் விரிவாக ஆராயப்பட்டன எனவும் தெரியவருகின்றது.

மூன்றுகட்டங்களாக நடாத்தப்பட்ட ஆய்வுப்பட்டறையில் மொத்தமாக சுமார் 120 பேர் பங்கு பற்றியிருந்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முழுமையான அறிக்கை வடிவில் கொழும்பில் உள்ள மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என இணைய வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

(க-77)

---

**அம்மனின் . . .**

காலை 9.45 மணியளவில் திருடர்கள் இருவர் அம்மன் ஆலயத்திற்குள் நுழைந்து அம்மனின் கழுத்தில் கிடந்த தாலியைத் திருடிச் செல்வதைக் கண்ட பொது மக்கள் சிலர் அவர்களைத் துரத்திய பொழுது திருடிய தாலியை வயல்வெளியில் எறிந்துவிட்டு ஓடமுற்பட்டனர்.

அச்சமயம் அங்குதிரண்ட பொதுமக்கள் திருடர்களைத் துரத்தி மடக்கிப் பிடித்து நையப்புடைத்ததோடு அவர்களைக் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

---

**புலிகள் . . .**

வும் தெரிவித்தார்.

திடீர் சுற்றி வளைப்புகள், கைதுகள் போன்றவற்றை கொழும்பில் ஏற்படுத்த வேண்டியுள்ளதால் இது தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## பிரயாண அனுமதி மீண்டும் ஆரம்பம்

(வவுனியா)

வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் பிரயாண அனுமதிப் பத்திரம் வழங்குவதை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மாலை வரை 400 பயணிகள் இவ்வாறு பிரயாண அனுமதிப் பத்திரம் பெற்று வவுனியா வந்துள்ளனர்.

கடந்த ஆறு மாதகாலமாக இந் நடைமுறை இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-4)

## குருநகர் கடற்றொழிலாளர்கள் வள்ளங்களைக் கரையில் கொண்டுவந்து பழுது பார்க்க இன்று முதல் அனுமதி

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் கடலிலுள்ள தமது வள்ளங்களைக் கரைக்குக் கொண்டுவந்து பழுது பார்ப்பதற்கு இன்று முதல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். தலைமை அலுவலகம் 512வது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஜெயதிலகாவுடன் தொடர்பு கொண்டு கடற்றொழிலாளர்களின் பிரச்சனை பற்றி எடுத்துக் கூறியதைத் தொடர்ந்தே இவ்வனுமதி முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மீன்பிடிக்க அனுமதிப்பது பற்றியும் விரைவில் ஆராயப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**அரசியல்...**

கொலுகூரே டியூகுணசேகரா இந்திகுணவர்த்தனா ஆகியோரும்லங்காசமசாமாஜகட்சியைச் சேர்ந்த அமைச்சர் பட்டிவீரக்கோன் பேராசிரியர் விஸ்வகதாண ஆகியோரும் முஸ்லீம் காங்கிரனஸ் சேர்ந்த அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---

**மேஜர் . . .**

வில் சேர்ந்தார் இந்திய தேசிய இராணுவ பயிற்சிக் கல்லூரியில் விசேட பயிற்சியும் பெற்றவராவர்.

இவர் பதவி ஏற்று மூன்று வாரங்களில் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**விசாரணையை . . .**

தெரிவிக்கப்பட்டது.

இதனால் செம்மணி புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்களுக்குரியவர்களின் உறவினர்களிடமிருந்து இரத்த பரிசோதனை நடத்தும் நடவடிக்கையும் பின் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-14)

---

**வாழ்த்துச் செய்தி**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளராகச் சேவையாற்றி 18 - 01 - 2000 முதல் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

கௌரவ

**வேலும்மயிலும் குகேந்திரன்**

**(வி. கே. ஜெகன்)**

அவர்களுக்கும்

**சின்னையா தவராசா**

அவர்களுக்கும்

எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், நீர்வேலி.

தவிசாளர்
உறுப்பினர்கள்
ஊழியர்கள்

(சி/ 008)

---

## சமுர்த்தி உதவி ஆணையாளர்களுக்கான வெளிநாட்டுப் புலமைப் பரிசிலுக்கு தமிழர்கள் முழுமையாகப் புறக்கணிப்பு

சமுர்த்தி உதவி ஆணையாளர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் தமிழ் உதவி ஆணையாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர். எம். கே. ரத்னாயக்காவிடம் நேரடியாகப் புகார் செய்துள்ளார்.

நாட்டில் மொத்தம் 21 சமுர்த்தி உதவி ஆணையாளர்களில் 2 தமிழரும் ஒரு முஸ்லிமும் தவிர ஏனைய 18 பேரும் சிங்களவராவர் இவர்களுக்கான இரு வரரகால புலமைப் பரிசில் பயிற்சி ஒன்று எதிர்வரும் 21ம் திகதி பாங்கொக்கில் நடைபெறுகின்றது. இதில் பயிற்சிபெற தெரிவு செய்யப்பட்ட 18 உதவி ஆணையாளர்களும் சிங்களவராவர் இப்பயிற்சிக்கு தெரிவு செய்வதில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை திட்டமிட்ட பாரபட்சமான செயலாகும். என்றும் இப்புறக் கணிப்பு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் புகாரில் தெரிவித்துள்ளார்.

இப்புகாருக்குப் பதிலளித்த கலாநிதிரத்னாயக்கா அடுத்த புலமைப் பரிசில் பயிற்சிக்கு தமிழர்களைச் சேர்த்துக் கொள்வதாக யோசப் பராஜசிங்கம் எம்,பிக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

(ந 4)

## அன்ரனி விசாலாட்சியின் சடலம் மகனிடம் ஒப்படைக்கப்பட்டது

### இராணுவ கோப்ரல் கைது

(வவுனியா)

நெலுக்குளம் பாவற்குளம் வீதியில் புதையல்பிட்டி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய அன்ரனி விசாலாட்சி நேற்று மரணமானார்.

இவரது மரணம் தொடர்பாக இராணுவ வாகனத்தை ஓட்டிய சாரதியான இராணுவ கோப்ரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரணமான அன்ரனி விசாலாட்சியின் (வயது 50) மரண விசாரணையின்போது, இராணுவ வாகனச் சாரதியின் கவலையீனத்தாலேயே விபத்து ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக தெரியவந்துள்ளது. மரண விசாரணையின்பின் சடலம் அவரது மகனிடம் ஒப்படைக்கப்பட்டது,

(வ)

## கைது செய்யப்பட்ட படையினர் மீண்டும் தப்பியோட்டம்

(கொழும்பு)

கடமையில் இருக்கும்போது தப்பியோடிய படையினரில் 17 படையினர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது மீண்டும் தப்பியோடி விட்டனர்.

உணவு வழங்குவதற்காக கதவைத்திறந்தபோது காவலரைத் தாக்கிவிட்டு தப்பியோடி விட்டனர். தப்பியோடியவர்களில் ஒருவர்கபெறணை என்ற இடத்தில் சோதனையில் ஈடுபட்ட இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனபாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிவித்துள்ளது.

**பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சு**

## தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களை பிரிட்டிஷ் இணைச்செயலர் சந்திப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சின் தெற்காசிய பிராந்திய இணைச் செயலாளர் குபின் விண்ட்ஜே நேற்று தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து இனப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

ஈ. பி- டி, பி செயலாளரும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா ஈ. பி. ஆர். எல் எவ் வைச் சேர்ந்த சுரேஷ் பிரேமசந்திரன், ரெலோ அமைப்பைச்சேர்ந்த சிறிகாந்தா, பிரதி மேஜர் ரவிராஜ், ஆகியோரை பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சின் தெற்காசிய பிராந்திய இணைசெயலாளர் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக அறிவித்துள்ளனர்,

---

**சமாதான . . .**

வரும் பொறுப்பை பிரிட்டனே ஏற்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பேச்சுவார்த்தைக்கான சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு பிரிட்டிஷ் அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம்கொடுப்பதன் மூலம் மூன்றாம் தர மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கலாம்,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த விரும்புவதால் பிரிட்டிஷ் அரசு இதனை முன்னின்று செய்துதரவேண்டும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருக்கிறது இந்நிலையில் சமாதான சூழ்நிலை ஏற்படுவது மிகவும் கஷ்டமானதாக இருக்கும்.

இந் நிலையில் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவி தமிழ் மக்களுக்கு அவசியம் தேவை என்பதை மன்னார் ஆயர் மேலும் வலியுறுத்திக் கூறினார்.

(வ)

## கணவன் வெட்டி மனைவி காயம்

மேற்கு மீசாலையைச் சேர்ந்த உமா மனோகர மலர் (வயது 34) என்பவர் கணவனால் வெட்டிக் காயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆவார்.

## திருட்டுக்கள் அதிகரிப்பு

வடமராட்சிப்பகுதியில் திருடரின் தொல்லை அதிகரித்து வருகின்றன. கடந்த சிலதினங்களாக பலவீடுகளில் பல்வேறு பொருட்கள் திருட்டுப் போயின.

---

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.